[1992 மார்ச் 20

293—

மருந்துப் பயிர்களின் விதை மற்றும் இலைப் பொருட்கள் ஏற்றுமதி.

* 5163— திரு. கே. சிங்காரம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கண்வலிக் கிழங்கு, நித்தியக் கல்யாணி போன்ற மருந்துப் பயிர்களின் விதை மற்றும் இலைப் பொருட்களை அரசே கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே,

இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த கண்வலி கிழங்குச் செடியைச் சங்க கால இலக்கியங்களில் செங்காந்தள் மலர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் செங்காந்தள் மலர்ச் செடி பெண்களின் விரல்களோடு ஒப்பிட்டுப் பேசுகின்ற ஒரு மென்மையான தன்மையுடைய பயிர், இந்தச் செடியானது பெரியார் மாவட்டம் தாராபுரம், வெள்ளக்கோவில், ஒட்டன்சத்திரம் போன்ற பகுதிகளிலே அதிகமான அளவிலே பயிரிடப்பட்டு வருகிறது. அதிகமான அளவிலே பயிரிடப்பட்டாலும் கூட, உற்பத்தி ஆகின்ற இந்த விதைகளை ஒரு வியாபாரிகள் மட்டும்தான் விலைக்கு வாங்குகிறார்கள். ஆகவே, அவர்கள் நிர்ணயிப்பது தான் விலை. அவர்கள் வாங்கவில்லை என்றால் இந்தப் பொருட்களை வேறு எங்கும் விற்பனை செய்ய முடியாத நிலை உள்ளது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. சிங்காரம், கேள்வி கேளுங்கள்.

திரு. கே. சிங்காரம் : 24-9-1991 அன்று வேளாண்மைத் துறை மானியத்தின் மீது பேசுகின்ற பொழுது நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள், இதனை அரசே கொள்முதல் செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். எனவே விவசாயிகளினுடைய துயர் துடைக்கின்ற தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அரசிலே இந்தத் தாய்மைக்கு

1992 மார்ச் 20]

பிரசவத்திற்குப் பயன்படுகின்ற இந்த மருத்துவப் பொருட்களான கண்வலிக்கிழங்கு விதையை அரசே கொள்முதல் செய்கின்ற நிலையை மீண்டும் பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்வலிக் கிழங்கு. க்ளோரியோசா, சூப்பர்பா போன்ற நாட்டு மருந்து செடிகள் தமிழகத்திலே பயிரிடப்பட்டு வருகின்றன. அவற்றை தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தின் மூலமாக வாங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், இவைபோன்ற மூலிகைகளை வாங்கி விற்பதற்கு வேண்டிய தொழில் நுட்ப வல்லுநர்கள் தங்களிடத்திலே இல்லையென்றும் நிதியில்லையென்றும் வேளாண் தொழில் கழகத்தின் இயக்குநர்கள் மறுத்த காரணத்தின் விளைவாகத் தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்திடம் தொடர்பு கொண்டு, அதனுடைய இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருத்துவக் கழகத்தின் வாயிலாக அந்தச் செடிகள் ஏற்கெனவே பயிரிடப்பட்டு வருகின்றன. எனவே, இவர்கள் மூலமாக வாங்குவதற்கு அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது,

திரு, கே. சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வகைச் செடிகள் தற்போது அறுவடை செய்யப்பட்டு விவசாயிகள் இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். ஆகவே, பரிசீலனை என்பதை விட்டுவிட்டு, விரைவாக இவற்றைக் கொள்முதல் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு, இது குறித்து; தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண், 295. திரு. இராம. இராமநாதன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS